DITTO WS

Reg. No. : ....................................

Name : ..........................................

**S-2212**

**SECOND YEAR HIGHER SECONDARY**
**SAY / IMPROVEMENT EXAMINATION, JUNE – 2023**

Part – II

Time : 2½ Hours

**TAMIL**

Cool-off time : 15 Minutes

Maximum : 80 Scores

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**(1 முதல் 10 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் எட்டனுக்கு சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம்)**

**(8 × 1 = 8 மதிப்பெண்கள்)**

1. திருமலைராயன் மலையில் வைக்கோல் எதற்கு சமம் ?
   (அ) மால் யானை (ஆ) குப்பை
   (இ) கம்பு (ஈ) மரம்

2. 'நம்ம நிலம்' என்ற கவிதையின் ஆசிரியர்
   (அ) வைரமுத்து (ஆ) காளமேகம்
   (இ) மு. சுயம்புலிங்கம் (ஈ) வாலி

3. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் வாய்மொழிக் கதைப்பாடல் எது ?
   (அ) அல்லி அரசாணி (ஆ) தாலாட்டு
   (இ) கரகாட்டம் (ஈ) ஒப்பாரி

4. வெண்மை + குடை எவ்வாறு புணரும்
   (அ) வெட்குடை (ஆ) வெற்குடை
   (இ) வெல்குடை (ஈ) வெண்குடை

5. "சேற்று நண்டு சேற்றைக் குழைத்
   தேற்றதடைக் குதே – மழை
   தேடியொரு கோடி வானம்
   பாடி யாடுதே" – இப்பாடலடிகள் இடம்பெறும் நூல்
   (அ) முக்கூடற்பள்ளு (ஆ) புறநானூறு
   (இ) திருவாசகம் (ஈ) தேவாரம்

6. '*Stagnation*' என்ற சொல்லின் தமிழாக்கம்

(அ) தேக்கம் (ஆ) ஏக்கம்

(இ) நோக்கம் (ஈ) வீக்கம்

7. தேசிய விளையாட்டு தினம் கொண்டாடப்படும் நாள்

(அ) செப்டம்பர் – 29 (ஆ) நவம்பர் – 29

(இ) ஆகஸ்ட்டு – 29 (ஈ) டிசம்பர் – 29

8. 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்று கூறியவர்

(அ) வள்ளுவர் (ஆ) ஔவையார்

(இ) பாரதியார் (ஈ) கவிமணி

9. இன்றைய எந்தப் பகுதி சேரநாடு என்று அன்று அழைக்கப்பட்டது

(அ) கேரளப்பகுதி (ஆ) தமிழ்நாடு

(இ) கர்நாடகா (ஈ) தெலுங்கானா

10. சிவன் கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்களை எவ்வாறு அழைத்தனர்.

(அ) திருவிடையாட்டம் (ஆ) தேவதானம்

(இ) திருப்படித்தானம் (ஈ) பள்ளித்தானம்

**(11 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் இரண்டுவீதம்) (6 × 2 = 12 மதிப்பெண்கள்)**

11. "இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

– இக் குறளுக்கான விளக்கம் தருக.

12. கீழே தரப்பட்டுள்ளவைகளுள் நெல் வகைகளின் பெயர்களை எடுத்தெழுதுங்கள்
[அன்னமழகி, மாப்பிளைச் சம்பா, பார்லி, கோதுமை]

13. "இம்மை மாறி மறுமையாயினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே" – இப்பாடலடிகள் தரும் கருத்தை எழுதுங்கள்

14. 'நடுகல்' – சிறு குறிப்பு எழுதுங்கள்

15. *Clock*, *Architecture* என்னும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எடுத்தெழுதுங்கள்
[சிறு தகடு, மின்துடிப்பு, ஆணை, கட்டட அமைப்பு]

16. கீழ்வருவனவற்றுள் பாரதிதாசன் எழுதிய நூற்களை எடுத்தெழுதுங்கள்
[குடும்ப விளக்கு, சடுகுடு ஆட்டம், பாண்டியன் பரிசு, விளையாட்டு அகராதி]

17. தாயமுறையின் இரண்டு வகைகளை எழுதுங்கள்.

18. 'கைமுக்கு' – சிறு குறிப்பு எழுதுக

**(19 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு அரை பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம்.**

**(5 × 4 = 20 மதிப்பெண்கள்)**

19. பொருத்துக
அ. ஆனி – மகரம்
ஆ. ஐப்பசி – மீனம்
இ. தை – மிதுனம்
ஈ. பங்குனி – துலாம்

20. வேலன் வெறியாட்டு நிகழ்வை வரிசைப்படுத்தி எழுதுங்கள்

21. “வடை பணியாரம்
இடத்தில்
கேக்குகளும்
பிட்ஸாக்களும்

தோசை
இட்லி
இடத்தில்
பரோட்டாவும்
நானும்

– இப்பாடலுக்கு விமர்சனக்குறிப்பு எழுதுங்கள்.

22. ‘உடற்பயிற்சியின் நன்மை’ என்ற தலைப்பில் ஒரு பெட்டி செய்தி தயாரிக்கவும்

23. “ரெண்டு பயகளும் எங்கல போய்ட்டு வாரீக?
மேலப்பட்டியில் துட்புக்குப் போய்ட்டு வாரோம் சாமி
துட்புக்குப் போன ஒங்க தெரு ஆட்களெல்லாம் மத்தியானமே
வந்துட்டாகளே, ஒங்க ரெண்ட பேத்துக்கு மட்டும்
என்னல இம்புட்டு நேரம்?”

மேலே தரப்பட்டுள்ள பகுதியைத் தூய தமிழில் எழுதுங்கள்.

24. “பாலைவனம் சோலைவன மாக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்”

**(25 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம். (4 × 6 = 24 மதிப்பெண்கள்)**

25. ‘சிலப்பதிகாரத்தில் விருந்தோம்பல்’ என்னும் தலைப்பில் சிறு கட்டுரை எழுதுங்கள்

26. கேரள நாட்டுப்புறக் கலையான ‘நங்கையார் கூத்து’ குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுங்கள்

27. “வையகம் பனிப்ப, வலன் ஏர்பு வளைஇ
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென”
– நெடுநல்வாடை

“ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி – மலை
யாள மின்னல் ஈழமின்னல்
சூழ மின்னுதே”
-முக்கூடற்பள்ளு
– இப்பாடல்களுக்கு ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுங்கள்.

28. இலக்கிய மன்ற விழாவில் ‘தமிழ் இலக்கியங்களில் உடல்நலம்’ என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்ற உரைக்குறிப்பு தயார் செய்க.

29. ‘அய்யங்காளியின் சமூகசீர்திருத்தங்கள்’ என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுங்கள்

**[30 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம்**

**(2 × 8 = 16 மதிப்பெண்கள்)**

30. பொங்கல் தினத்தை முன்னிட்டு உங்கள் பள்ளியில் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. அதில் பங்குபெற “இயற்கை வேளாண்மையின் சிறப்பு” என்ற தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்

குறிப்புகள்:-

- இயற்கை வேளாண்மை
- இயற்கை வேளாண்மையின் நோக்கம்
- நிலத்திற்கு ஓய்வு கொடுத்தல்
- இயற்கை உணவு

31. “வலைக்குள் வலை” கதையின் பாத்திரப்படைப்பு, கதைக்கரு, மொழிநடை குறித்து திறனாய்வு செய்து எழுதுங்கள்.

32. உலக யோகா தினத்தை முன்னிட்டு மாத இதழ் நடத்தும் கட்டுரைப் போட்டியில் பங்குபெற “யோகாவும் உடல்நலமும்” என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்புகள்:

- இரத்த ஓட்டம் அதிகரித்தல்
- மன அமைதி பெறுதல்
- நோயற்ற வாழ்வு
- நல்ல உடல் அமைப்பு